**செய்தி வெளியீடு எண்: 347** **நாள் : 15.07.2016**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா . காமராஜ் அவர்கள் தலைமையில், இன்று (15.07.2016) மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களுடன் மாநில அளவிலான கலந்தாய்வுக்கூட்டம், சென்னை, சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் நடைபெற்றது.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ், 1 கோடியே 91 இலட்சத்து 53 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கும் உன்னதமான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதந்தோறும் 34 ஆயிரத்து 686 நியாய விலை அங்காடிகள் மூலம் 3 இலட்சத்து 23 ஆயிரம் மெ.டன் தரமான அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, சர்க்கரை, கோதுமை முதலான பொருட்கள் மானிய விலையிலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு வகைகள் கிலோ ரூ.30 என்ற விலையிலும், பாமாயில் லிட்டர் ரூ.25 என்ற குறைந்த விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் ஆணையின்படி, தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி, ஒவ்வொரு நியாயவிலைக்கடைக்கும் வழங்கப்படும் இணைய இணைப்புடன் கூடிய விற்பனை இயந்திரத்தில் (Point of Sale) குடும்ப அட்டை எண், உறுப்பினர்களின் எண்ணிக்கை, கைபேசி எண், அட்டையின் வகை, எரிவாயு விவரம், ஆகியன மென்பொருள் பயன்பாட்டில் பதிவு செய்யப்படுகின்றன. இந்த விவரம் குறுஞ்செய்தியாக, குடும்ப அட்டைதாரரின் கைபேசி எண்ணிற்கு அனுப்பப்படுகிறது. தற்போது 13 மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. ஏனைய மாவட்டங்களிலும் இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. ஆதார் அட்டை வழங்கும் பணி முழுமை பெற்று பதிவுகள் நிறைவு செய்யப்பட்ட பின்னரே, மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க இயலும். எனவே, அனைத்து அங்காடிகளின் பணியாளர்களுக்கும், இதற்கென நியமிக்கப்பட்டுள்ள மென்பொருள் நிறுவனத்தார் மூலம்

இப்பணி தொடர்பான பயிற்சியை வழங்க, மாவட்ட வழங்கல் அலுவலர்கள் ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு 60 நாட்களுக்குள் அட்டை வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, கடந்த 5 ஆண்டுகளில், இதுவரை 16 இலட்சத்து 20 ஆயிரத்து 128 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 20 ஆயிரத்து 522 குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு தயாராக உள்ளன என்றும் மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இன்றுவரை, 4 இலட்சத்து 85 ஆயிரத்து 123 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக இரண்டாம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், இன்று வரையில், 5 இலட்சத்து 9ஆயிரத்து 184 மனுக்கள் பெறப்பட்டு 5 இலட்சத்து 8 ஆயிரத்து 412 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், 3 மாதத்திற்கு ஒரு முறை, நுகர்வோர் பாதுகாப்பு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனான கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தி, அவற்றின் குறைகள் மற்றும் ஆலோசனைகளை கேட்டறிந்து, மேல் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும். நெடுஞ்சாலையோர உணவகங்களிலும், வணிக நிறுவனங்களிலும் உணவு பொருட்களின் தரம் மற்றும் அதிகபட்ச விற்பனை விலைக்கு (MRP) மிகாமல் விற்கப்படுவதை, உறுதி செய்வது தொடர்பான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் ஒட்டுநர்கள் மட்டுமல்லாது கடத்தலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணை போகும் நபர்களும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM ACT) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கடந்த 5 ஆண்டுகளில், இதுவரை 882 நபர்கள் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள் நியாய விலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள், ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்பட்டுள்ளனவா என்றும், அங்காடிகள் குறித்த நேரத்தில் திறக்கப்பட்டு சீரான முறையில் விநியோகம் நடைபெறுகின்றனவா என்றும், உறுதி செய்து வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.ஆர்.பழனிச்சாமி, இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**